# மாநில மனநல ஆணையம், தமிழ்நாடு

## INSTITUTE OF MENTAL HEALTH CAMPUS

மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென் னை – 600 010.

# உலக மனநல தின விழா கொண்டாட்டம்

## (அக்டோபர் 10)

உலக சுகாதார நிறுவனம், ஆரோக்கியம் என்பது உடல் நலம், மனநலம், சமூக நலம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது என வரையறுக்கிறது. உலக மக்கள் தொகையில் 1 சதவிகிதத்தினர் தீவிர மனநோய்களாலும், 15 சதவிகிதத்தினர் மிதமான மனநோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர். போட்டியும், மனஅழுத்தமும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் விடலைப் பருவத்தினரும், இளைஞர்களும் மனநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். குடி, மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாதலும், அதிகரித்து வருகிறது. மன அழுத்தமும், மனச்சோர்வும், மனக்குழப்பமும் மனிதனை தற்கொலைக்கு இழுத்துச் செல்கிறது.

மேலும், மூடநம்பிக்கைகளும், மனநோய் பற்றிய தவறான அணுகு முறைகளும், நம்பிக்கைகளும் இன்றைய சூழ்நிலையிலும் மிகப் பரவலாக மக்களிடையே காணப்படுகிறது. இதனால் மனநல பாதிப்புகள் மந்திரத்தாலும், மாந்ரீகத்தாலும், பில்லி, சூனியம் போன்றவற்றாலும் ஏற்படுகின்றன என்ற மூடநம்பிக்கையாலும், அறியாமையாலும், வெட்கத்தினாலும், பயத்தாலும், மக்கள் உந்தப்பட்டு, மனநல மருத்துவரிடம், மனநோய் முற்றிய நிலையில், மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வருகிறார்கள்.

மேற்கண்ட அறியாமை மக்களிடமிருந்து அகலும் நோக்கத்துடன் உலக மனநல விழா கொண்டாடப்படுகிறது.

தற்கொலையும், தற்கொலை முயற்சிகளும் மனநல பாதிப்பின் விளைவுகள் மற்றும் அறிகுறிகள் என்பதை மக்களிடமும், மருத்துவர்களிடமும் பரவச்செய்யும் விதமாக, தொடர் மருத்துவக் கல்வி பயிற்சியும், சிறு புத்தக வெளியீடும் இவ்விழாவின் அங்கமாக நடத்தப்படுகிறது.

மக்கள் அனைவரும் மனநோய்களால் பாதிக்கப்படாமல், மனநலத்துடன் வாழ வேண்டும் என்பதே இவ்விழாவின் குறிக்கோளாகும்.

**STATE MENTAL HEALTH AUTHORITY, Tamil Nadu**
**INSTITUTE OF MENTAL HEALTH CAMPUS**
**Medavakkam Tank Road, Kilpauk, Chennai - 600 010.**

# World Mental Health Day Celebration (October - 10)

According to World Health Organization (WHO), Health means Physical, Psychological and Social Wellbeing.

About 1 to 2 % of the population suffers from Major Mental Illnesses like Psychoses and Mood disorders. Around 15 to 20 % of the People are affected by Minor Mental Illnesses like Anxiety disorders, and Stress related disorders. In view of the present competitive, stressful environment, psychiatric problems among adolescents and young adults are escalating distressingly. So much so, Alcohol and Substance misuse and the consequent psychiatric morbidity are also increasing alarmingly. Moreover suicide, an important consequence of major psychiatric problem is increasing in distressing proportion year by year.

Moreover, Superstitious belief and Social Stigma about Mental illness are still commonly prevailing in our Society. Even today, the false and superstitious belief, that mental illnesses are caused by Black magic, Witchcraft, Evil spirits and Bad stars, IS existing in our country. Because of shyness, ignorance, poverty, fear and false belief, family members take the patient to magicians and mantravadis and after realizing that the disease get worsened, they bring the patient for medical treatment.

In order to create an awareness about prevention of psychiatric problems, elimination of superstitious beliefs, early recognition and early intervention of psychiatric problems, the celebration of world Mental Health day is being conducted every year